LIBRARY
4 - MAY 1962
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 17th March 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Newsreels regarding Community Development Works

*425 *Q.*—SRI S. M. ANNAMALAI: *கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—*

(அ) சமுதாய நல திட்டப் பகுதிகளில் செய்யப்படும் விளம்பரங்கள், செய்திப் படம் முதலியவைகள் மத்திய சர்க்கா ரால் அனுப்பப்படுகின்றனவா ?

(ஆ) இவைகளில் நம் மாநிலத்தில் நடைபெறும் அபி விருத்தி வேலைகளைக் குறித்தும் காட்டப்படுகின்றனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: *(அ) ஆம்.*

(ஆ) ஆம்.

SRI A. GOVINDASAMY: *சமுதாய நலத் திட்டங்களின் சார்பாக எடுக்கப்பட்ட படங்களில் நம் ராஜ்யத்தில் நடக்கின்ற சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களின் வேலைகளைப்பற்றி படங்கள் எடுக்கப்பட்டு வட நாட்டில் காட்டப்படுகிறதா ?*

THE HON. SRI C. SUBRAMANIAM: *ஆம். காண்பிக்கப் படுகிறது. வடநாட்டில் நம் நாட்டிலுள்ள சமுதாயநலத் திட்டங்களின் வேலைகளைப்பற்றி எடுக்கக்கூடிய படங்கள் காட்டப்படுகின்றன. உதாரணமாக ஒன்றிரண்டு விபரங்களை குறிப்பிடுகிறேன்—*

Gramdan activities in Kanvoipatti, Vattalakundu Block, Rural Welfare activities in Tirumangalam Block, Pattamadai Mat-Weaving Industry in Cheranmahadevi Block, Community Development activities—special coverage, School Improvement Schemes, Midday Meals Schemes, etc.

SRI S. M. ANNAMALAI: *ஸார், மத்திய சர்க்காரால் தயாரிக்கப்படுகிற படங்களைத்தவிர நம்முடைய சர்க்காராலும் இம்மாதிரிப்பட்ட படங்கள் தயாரிக்கப்படுகின்றனவா? அதல்லாமல் மத்திய சர்க்கார் எடுக்கிற படங்களுக்கு நம் முடைய சர்க்கார் பணம் கொடுக்கின்றதா ?*

[17th March 1960

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம், டாக்குமென்டரீஸ் என்று சில படங்கள் எடுக்கப்படுகின்றன. அது தவிர, நியூஸ் ரீல் என்று வேறு எடுக்கப்படுகின்றன. நியூஸ் ரீல்லே பொறுத்தவரை முழுவதும் மத்திய சர்க்காரால்தான் எடுக்கப்படுகிறது. டாக்குமென்டரீஸ் படத்தில் பெரும் பகுதி மத்திய சர்க்காரால் எடுக்கப்படுகிறது. சென்னை அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் சில டாக்குமென்டரீஸ் படங்களும் எடுக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசாங்கம் எடுக்கும் படங்களுக்கும் நாம் பணம் கொடுப்பதில்லை.

SRI P. S. CHINNADURAI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பெரும்பாலான செய்தி படங்களிலும் நம்முடைய பகுதியிலுள்ள அபிவிருத்தி வேலைகளைப்பற்றி செய்திப்படங்களே இல்லை என்று நான் நினைக்கிறேன். ஆகவே செய்திப்படங்களில் நம்முடைய பகுதியிலுள்ள செய்திகளையும் அதிகமாக காண்பிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் நாம் இரண்டு விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். மத்திய அரசாங்கத்தால் செய்யப்படுகிற வேலைகளுக்கு செய்திப்படங்களில் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அதன் பின்னால் 13, 14 ராஜ்யங்களின் செய்திகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவைகள் எல்லாம் சிறிய பகுதிகளாகத்தான் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆகவே இதைப்பற்றி சமீபத்தில் பேசி, அந்தந்த பிராந்தியங்களுக்கு அனுப்பப்படும் செய்திப் படங்களில் அந்தந்த பிராந்திய வாரியாக எடுக்கப்பட்ட செய்திப்படங்களையே காண்பிக்கவேண்டும் என்றும், அதற்கு தகுந்தாற்போல் எடிட் செய்து அனுப்பவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். அதை மத்திய அரசாங்கத்திலும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

SRI M. D. THIAGARAJA PILLAI: இம்மாதிரியான, பிரயோஜனகரமான படங்களை காண்பித்தால் பள்ளிக்கூட பிள்ளைகளுக்கும் உதவியாய் இருக்கும் என்று நம்புகிறேன். பெரும்பாலும் எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் இதற்கான மெஷின்கள் இருக்கின்றன. ஆகவே இந்தப் படங்களை பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்பிக்கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: பள்ளிக்கூடங்களுக்கு கல்வி அடிப்படையில் எடுக்கப்பட்ட படங்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றன. அது டி.பி.ஐ. அவர்களின் கீழ் பிலிம் லைப்ரரி ஒன்று இருக்கிறது. கல்வி புகட்டக்கூடிய படங்களை காண்பிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. செய்திப் படங்களை அங்கு காண்பிக்க முடியாது.

SRI A. GOVINDASAMY: சமுதாய நலத் திட்டத்தின் கீழ் நடைபெறுகின்ற வேலைகளை காண்பிக்கும் காலண்டர் முதலியவைகளிலும் வடநாட்டில் நடைபெறுகின்ற வேலைகளைப் பற்றியும்

வட நாட்டுத் தலைவர்களைப்பற்றியும்தான் போடுகிறார்கள். ஏன் அவைகளில் தென்னாட்டில் நடைபெறுகின்ற அபிவிருத்தி வேலைகள் குறித்து வெளிவருவதில்லை?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் நமக்குள்ள கஷ்டம் என்னவென்றால், தென்னாட்டை மட்டும் இதில் எடுத்துக் கொள்ள முடியாது. 13, 14 ராஜ்யங்களில் நடைபெறுகின்ற வேலைகளையும் இதில் சேர்க்கவேண்டும். ஆனால் நம்முடைய அளவு குறைவாகத்தான் வெளியிடப்படுகிறது என்பதை நான் ஓரளவுக்கு ஒப்புக்கொள்கிறேன். ஆகவே நம்முடைய நாட்டுக்கு வரக்கூடிய படங்களில் அதிகமாக இந்த பிராந்தியத் திலே உள்ள அபிவிருத்திகள், செய்திகள் பற்றிய விவரங்களைக் கொண்டு எடுக்கப்பட்ட படங்களை தனியாக எடிட் செய்து அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர் களும் சம்மதித்து இருக்கிறார்கள். இப்படிப்பார்க்கும்போது, பொதுவாக இன்னொரு பக்கம் நடக்கக்கூடிய செய்திகளை அறிவதுதான் "நியூஸ்" என்பதற்குச் சரியாக இருக்கும். அதல்லாமல் நம்முடைய நாட்டிலுள்ள வேலைகளைப்பற்றி படம் பிடித்து நாமே பார்த்து திருப்தி அடைவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லையென்றால் எனக்கும் அதில் ஆட்சேபணை ஒன்றும் இல்லை.

Harveypatti Workers' Colony, Madurai

* 426 Q.—SRI P. S. CHINNADURAI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have received any complaint about the refusal to give possession of the houses in the Madurai Harveypatti Workers' Colony, Madurai, to those workers who have paid the full amount; and

(b) if so, the action taken by the Government against the concerned co-operative society?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) There was some dispute between the Madurai Mills Co-operative Housing Society and its worker members regarding allotment of houses constructed by the Society, but it has been amicably settled.

Liquor permits

* 427 Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்கு பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் எத்தனை பேருக்கு பிராந்தி, பீர் முதலிய உயர்ந்த ரக குடிபானங்களுக்காக லைசென்சு கொடுக் கப்பட்டுள்ளது? (ஜில்லா வாரியாக).

(ஆ) என்ன காரணத்திற்காக கொடுக்கப்பட்டது?